என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே இராமநாத புரத்திற்கு ஒரு வங்கி இருப்பதன் காரணமாக மேலும் 2 வங்கிகள் புதிதாக உருவாக்கப்படும். அதோடு பல கிராமங்களில் கிளைகள் இல்லை. அப்படிப்பட்ட கிளைகளை உருவாக்குவதற்கான ஏற் பாடுகளை தற்போது அரசு செய்து கொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 124, திரு. வி. எம். சுப்பிரமணியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

124—

போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுதல்.

* 1472. திரு. வ. மு. சுப்பிரமணியன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பாண்டியன் போக்குவரத்துக் கழகம் தணக்கன்குளம் கிராமத்திலும், மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் இராம நாதபுரத்திலும் தொழிலாளர்களுக்காக வாங்கப்பட்ட வீட்டு மனைகளில் வீடு கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேற்கண்ட பொருட்கள் குறித்து தக்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

திரு. வ. மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே இருந்து பல நாட்களாக கிடப்பில் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்திலாவது அதை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

1991 அக்டோபர் 1]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டின் வரலாற்றில் முதன் முதலிலே தொழிலாளர்களுக்காக வீடு கட்ட இடம் பெறுவதற்கு, நிலத்தினை பெறுவதற்காக 3-ல் ஒரு பங்காக சுழல் நிதி ஒன்றினை உருவாக்கவேண்டும் என்று சொல்லி அறிவுரை வழங்கிய நம்முடைய தமிழகத்தின் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தான் என்பதை நான் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆகவே, நூறாவது நாளில் வெற்றிகரமாக இந்த அரசு நடைபோட்டுக்கொண்டிருக்கிற நேரத்தில் இப்பணிகளை விரைவாக செயற்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வ. மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாண்டியன் போக்குவரத்துக் கழகம் தணக்கன்குளம் கிராமத்திலும், மருதுபாண்டியர் போக்கு வரத்துக் கழகம் இராமநாதபுரத்திலும் தொழிலாளர்களுக்காக வாங்கப்பட்ட இடத்தின் பரப்பளவு எவ்வளவு? எத்தனை தொழிலாளர்களுக்கு இது ஒதுக்கப்பட்ட இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக 4.40 ஏக்கர் நிலத்தினை ஆர்ஜிதம் செய்து இருக்கிறோம். மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக 1.72 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்து பணிகள் துவங்குவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. விரைந்து இப்பணிகளை மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆண்டித்தேவர்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்கு தணக்கன் குளத்தில் 4.1 எக்கர் நிலம் மாண்புமிகு புரட்சித் தலைவர் காலத்தில் எடுக்கப்பட்டது. இன்னும் அங்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை. போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் வீடு கட்டிக் கொடுக்கப்படுமா அல்லது அந்தத் தொழிலாளர் களுக்கு கடனையாவது கொடுத்து உடனடியாக அவர்கள் வீடு கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் அது அப்படியே கிடப்பில் போடப்பட்டுவிட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய நூறாவது நாள் ஆட்சிக்காலத்தில் இதற்கு உறுதியான ஒரு பதிலை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

முற்பகல் 10.00

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் இவர்களுக்கு கடனாக வழங்கி, வீடுகள் கட்டித் தருவதற்கு விரைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 125 திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள்.

125—

வழுக்குப்பாறை மணியாச்சி அணைத் திட்டம்.

* 810 திரு. வே. பெரியசாமி :
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டத்தில் வழுக்குப்பாறை, மணியாச்சி அணைத் திட்டத்தினை 1991-92-ல் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?